# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

*(1998, யூன் மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1998, யூன் மாதம் 05 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 6.50** **தபாற் செலவு : ரூபா 2.50**

## 1998ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.— ஒ 16/97

## தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

1. இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமென எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தண்டனைச் சட்டக்கோவையின் 286அ என்னும் பிரிவானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 19 ஆம் அத்தியா தின் 286அ என்னு பிரிவைத் திருத்து

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவென மீள இலக்கமிடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(2) புகைப்படங்களின் அல்லது நிழற்படச் சுருள்களின் உருவிளக்கப்படுத்துநர் ஒருவராக இருந்துகொண்டு, உருவிளக்கப்படுத்துவதற்காகத் தமக்குத் தரப்பட்ட புகைப்படம் அல்லது நிழற்படச் சுருள் எதுவும், அல்லது பிள்ளையொன்றின் ஆபாசமான புகைப்படமாக அல்லது நிழற்படச்சுருளாக இருக்கின்றதெனக் காணுகின்றவரான ஆள் எவரும், அவ்வாறு கண்டுபிடித்ததும், தம்வசம் அத்தகைய புகைப்படம் அல்லது நிழற்படச்சுருள் இருக்கின்றதென மிகச் சமீபத்தில் இருக்கின்ற பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

2 -D 048905– 1,600 (98/04)

(3) புகைப்படங்களின் அல்லது நிழற்படச் சுருள்களின் உருவிளக்கப்படுத்துநர் ஒருவராக இருந்துகொண்டு (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறி நடக்கின்ற ஆள் எவரும், இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய காலமொன்றுக்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டனையினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவ்விரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 288, 288அ மற்றும் 288ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

3. பின்வரும் புதிய பிரிவுகள் 287 ஆம் பிரிவை உடனடுத்துப்பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை, முதன்மைச் சட்டவாக்கத்தின் முறையே 288, 288அ அத்துடன் 288ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"பிள்ளைகளைப் பிச்சை எடுக்கச் செய்வித்தல் அல்லது கூட்டிவிடுதல்.

288. (1) பிச்சை எடுக்கும் அல்லது யாசகப் பொருள் பெற்றுக்கொள்ளும் நோக்கங்களுக்காக அல்லது யாசகப்பொருள் கொடுக்கப்படுவதைத் தூண்டும் நோக்கங்களுக்காக (பாடுதல், விளையாட்டுக்காட்டல், கேளிக்கை நிகழ்ச்சி நடாத்துதல், எதனையும் விற்பனை செய்வதற்காகக் கொடை முனைதல் அல்லது வேறுவகையில் செய்வதென்ற பாசாங்கு எதுவும் இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன) பிள்ளை ஒன்றை ஏதேனும் தெருவில், வளவுகளில் அல்லது இடத்தில் நிற்கச் செய்விக்கின்ற அல்லது கூட்டிவிடுகின்ற ஆள் எவரும், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையில் ஒருவகையான மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர், குற்றப்பணமொன்றுக்கும் ஆளாகலாம்.

(2) இப்பிரிவில் "பிள்ளை" என்பது பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஆளொருவர் எனப் பொருள்படும்.

உடலுறவுக்குக் கூட்டிவிடுபவர்களாகச் செயற்படுவதற்குப் பிள்ளைகளை வாடகைக்கு அல்லது ஊழியத்துக்கு அமர்த்துதல்.

288அ. (1) சட்டவிரோதமான உடலுறவுக்கென ஆளெவரையும் கூட்டிவிடுவதற்காகத் தெரிந்து கொண்டே பிள்ளையொன்றை வாடகைக்கு அமர்த்துகின்ற, வேலைக்கு அமர்த்துகின்ற, இசையச் செய்கின்ற, பயன்படுத்துகின்ற, தூண்டுகின்ற அல்லது பலவந்தப்படுத்துகின்ற ஆள் எவரும், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டாண்டுகளுக்குக் குறையாததும் ஐந்தாண்டுகளை விஞ்சாததுமான காலமொன்றுக்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டனையால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் குற்றப்பணமொன்றுக்கும் ஆளாகலாம்.

(2) இப்பிரிவில் "பிள்ளை" என்பது பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஆளொருவர் எனப் பொருள்படும்.

தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு செல்லுவதற்குப் பிள்ளைகளை வாடகைக்கு அல்லது வேலையில் அமர்த்துதல்.

288ஆ. (1) ஏதேனும் தடைசெய்யப்பட்ட பொருளைக் கொண்டுசெல்லுவதற்குத் தெரிந்து கொண்டே பிள்ளையொன்றை வாடகைக்கு அமர்த்துகின்ற, வேலைக்கு அமர்த்துகின்ற, இசையச் செய்கின்ற, பயன்படுத்துகின்ற, தூண்டுகின்ற அல்லது பலவந்தப்படுத்துகின்ற ஆள் எவரும், ஐந்தாண்டுகளுக்குக் குறையாததும் ஏழாண்டுகளை விஞ்சாததுமான காலமொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவர் குற்றப்பணமொன்றுக்கும் ஆளாகலாம்.

(2) இப்பிரிவில் —

"பிள்ளை" என்பது பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஆளொருவர் எனப் பொருள்படும் ;

"தடைசெய்யப்பட்ட பொருள்" என்பது, (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் ஔடதங்கள் கட்டளைச்சட்டத்தினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்டிருக்கும் பொருளைக் கொண்டிருக்கும் ;

"கொண்டு செல்லுதல்" என்பது, விற்பனை செய்தல், கொடுத்தல், பெறுதல், களஞ்சியப்படுத்துதல், இடுதல், எடுத்துக்கொண்டு செல்லுதல், அனுப்புதல், ஒப்படைத்தல் அல்லது விநியோகித்தல் எனப் பொருள்படும்.".

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 302 ஆம் பிரிவை நீக்குதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 302 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 360அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 360அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :–

(1) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "இலங்கையில் அத்தகைய ஆளின் வழமையான வசிப்பிடத்தை விட்டுச் செல்வதற்கு" என்னும் சொற்களிலிருந்து அந்தப் பந்தி முடியும் வரையுள்ள சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும் :–

"இலங்கைக்குள்ளாக அல்லது இலங்கைக்கு வெளியே சட்டவிரோதமான உடலுறவுகொள்ளும் நோக்குடன் இலங்கையிலுள்ள அத்தகைய ஆளின் வழமையான வசிப்பிடத்தை விட்டுச்செல்வதற்கு" ;

(2) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் "ஏதேனும் விபசார விடுதியில் சட்டவிரோதமான உடலுறவுகொள்ளும் அல்லது பாலியல் துஷ்பிரயோகம்செய்யும் நோக்குடன்", என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவையேனும் வளவுகளில் சட்டவிரோத உடலுறவுகொள்ளும் அல்லது பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் நோக்குடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 363 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 363 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :–

"(ஆ) அவள் சட்டமுறையாக அல்லது சட்ட முறையற்ற விதத்தில் தடுத்துவைத்திருக்கப்படும்போது அவளது சம்மதத்துடன் அல்லது வலோத்காரத்தை அல்லது மிரட்டலை உபயோகித்து அல்லது தடுத்துவைக்கப்படுதல் என்ற பயமுறுத்தல்மூலம் அல்லது மரணம் அல்லது ஊறுவிளைவிக்கப்படும் என்ற பயத்திற்கு அவளை உட்படுத்துவதன்மூலம் அவளின் சம்மதம் பெறப்பட்டிருக்கும்போது ; ".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 365ஆ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 365ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர், பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் :—

"(அஅ) மற்ற ஆள் பதினாறு வயதுக்குக் குறைவாக இருக்கும்போது, அவ்வாளின் சம்மதத்துடன் அல்லது சம்மதமில்லாமல் ;"; அத்துடன்

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஆ) அத்தகைய மற்ற ஆள் சட்டமுறையாக அல்லது சட்டமுறையற்ற விதத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும்போது, அவ்வாளின் சம்மதத்துடன் அல்லது அச்சம்மதமானது, வலோத்காரத்தை அல்லது மிரட்டலை அல்லது தடுத்துவைக்கப்படுதல் என்னும் பயமுறுத்தலை உபயோகப்படுத்துவதன் மூலம் அல்லது மரணம் அல்லது ஊறு விளைவிக்கப்படும் என்னும் பயத்தை அத்தகைய மற்ற ஆளில் ஏற்படுத்துவதன்மூலம் பெறப்பட்டிருக்கின்ற விடத்து ; ".

8. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை எதுவும் ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.